பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 24 வியாழக்கிழமை 05.02.2025 | அதிர்வு 189

## லசந்தவின் கொலையாளிகளை உடனே வெளிக்கொணருங்கள்!

### அரசுக்கு சஜித் அழுத்தம்



ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவைக் கொலை செய்தவர்கள் யார் என்பதை அரசு உடனடியாக வெளிக்கொணர வேண்டும் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# லசந்தவின் கொலைக்கு நீதி வேண்டும்





## சட்டமா அதிபரின் பரிந்துரைக்கு எதிராக ஊடகவியலாளர்கள் இன்று போராட்டம்

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்குச் சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிந்துரை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊடகவியலாளர்கள் இணைந்து உயர்நீதிமன்ற வாயிலில் இன்று வியாழக்கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி 02

### பாதுகாப்பு குறைப்புக்கு எதிராக

# மஹிந்த தாக்கல் செய்த மனு மார்ச் 19 இல் விசாரணைக்கு





முறையான மதிப்பீடின்றி தமது பாதுகாப்பு குறைக்கப்பட்டதால் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக உத்தரவுபிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 19ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் இன்று 03

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**லசந்தவின் கொலைக்கு...**
மாதம் 8 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், இந்தக் கொலை வழக்குடன் தொடர்புடைய மூன்று நபர்களை விடுதலை செய்வதற்குச் சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிந்துரை செய்திருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் இணைந்து பதாகைகளை ஏந்தியவாறு உயர்நீதிமன்ற வாயிலில் இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது லசந்த விக்கிரமதுங்க உள்ளிட்ட பல படுகொலைகளுக்கு நீதி வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.




















**லசந்தவின் கொலையாளிகளை...**
என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நான் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தேன். இத்தகைய தருணத்தில், இது தொடர்பாக அண்மைக்காலமாக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் அரசு தலையிட்டு வெளிப்படையான விசாரணையை நடத்தி, லசந்தவின் குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நீதி நியாயத்தை நிலைநாட்டி, கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றார்.



# கிளிநொச்சியில் இழுவைமடித் தொழிலில் ஈடுபட்ட மன்னார் மீனவர்கள் 7 பேர் கைது!

(ந.லோகதயாளன்)

தடை செய்யப்பட்ட ரோளர் படகு மூலம் தடை செய்யப்பட்ட இழுவைமடித் தொழிலில் ஈடுபட்ட மன்னார் படகுகள் இரண்டு கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளால் இன்று அதிகாலை மடக்கிப் பிடிக்கப்பட்டன.

கிளிநொச்சி எல்லைப் பரப்புக்குள் இந்திய இழுவைப் படகுகளுக்கு நிகராக மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட ரோளர் படகுகளும் இழுவை மடித் தொழிலில் ஈடுபடுவதனால் தமது தொழில் பாதிக்கப்படுவதற்குத் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உள்ளூர் மீனவ சங்கங்கள் விடுத்த கோரிக்கையின் பேரில் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இழுவைமடித் தொழிலில் ஈடுபட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு ரோளர் படகுகளை மடக்கிப் பிடித்தனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட இரண்டு ட்ரோளர் படகுகளிலும் 7 மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தமையால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

# 2025 இடைக்காலக் கணக்கு அறிக்கையில் கிளிநொச்சிக்கு வெறும் 13 மில்லியன் ரூபா

(ந.லோகதயாளன்)

இடைக்காலக் கணக்கு அறிக்கையில் கிளிநொச்சிக்கே மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாத நிலையில் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப் பகுதிக்கான கணக்கறிக்கை நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் செலவுகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு இடம்பெறும் செலவீனங்களில் இருந்து மாவட்ட அபிவிருத்திக்காகவும் குறிப்பிட்டளவு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள நிதியில் நாடு முழுவதும் ஒதுக்கப்பட்ட நிதியில் கிளிநொச்சி மாவட்டத்துக்கே மிகக் குறைந்தளவு நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்துக்கு 13 மில்லியன் ரூபாவும், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 56 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குத் தலா 26 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மஹிந்த...**

திகதியிட்டுள்ளது.

ப்ரீத்தி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகிய மூவரடங்கிய நீதியர்சர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுவுடன் தொடர்புடைய பிரதிவாதிகளுடன் கலந்தாலோசிக்க கால அவகாசம் தேவைப்படுவதாகப் பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் வருணிகா ஹெட்டிகே மன்றில் தெரிவித்தார்.

அத்துடன் மனு மீதான ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கும் கால அவகாசம் வழங்குமாறு அவர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அதற்கிணங்க, விடயங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கு பிரதிவாதிகளுக்கு அனுமதி வழங்கி தேவையேற்படின் மனுதாரர்களும் தமது ஆட்சேபனைகளை முன்வைக்க முடியும் என உத்தரவிட்டது.

எவ்வித பாதுகாப்பு மதிப்பீடுமின்றி தமது சேவைபெறுநரின் பாதுகாப்பை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மனுதாரரான மஹிந்த ராஜபக்ஷ சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி ஷப்ரி நீதிமன்றத்தில் வாதிட்டார்.

முறையான பாதுகாப்பு மதிப்பீட்டின் பின்னரே அவரது பாதுகாப்பைக் குறைப்பது அல்லது அதிகரிப்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி மன்றில் வலியுறுத்தினார்.

அதற்கமைய, முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உறுதி செய்வதற்காக இந்த மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 19ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளத் திகதியிட்டது.



# தைப்பொங்கல் விழாவில் சஜித் பங்கேற்பு

கல்கிசை, படோவிட்ட மாரிபுரம் அருள்மிகு முத்தமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற தைப் பொங்கல் விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மாரிபுரம் அருள்மிகு முத்தமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

இயற்கையைத் தெய்வமாக வழிபடும் வாழ்வியலை உலக்கு எடுத்தியம்பிய மகத்தான பண்டிகையான தைப் பொங்கல் விழாவில், சகோதர தமிழ் மக்களோடு இணைந்து அதனைக் கொண்டாடக் கிடைத்தமையைப் பெரும் பாக்கியமாக கருதுவதாக எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

### வித்தியா படுகொலை வழக்கு:

# மரணதண்டனைக் குற்றவாளிகள் தாக்கல் செய்த மனு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு



யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மரணதண்டனைக் குற்றவாளிகள் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைக்கு உயர்நீதிமன்றம் திகதி அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு மரணதண்டனை விதித்து விசேட நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த மரணதண்டனைக்கு எதிராகக் குற்றவாளிகள் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்தனர்.

இந்த மனு இன்று ப்ரீத்தி பத்மன் சூரசேன,ஜனக் த சில்வா,சம்பத் அபேக்கோன் ஆகிய மூவரடங்கிய நீதியரசர் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி இந்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரிப்பதற்கு நாளொன்றை ஒதுக்குமாறு கோரிக்கை முன்வைத்தார்.


அதன்படி உரிய மேன்முறையீட்டு மனுக்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு மூவரடங்கிய நீதியரசர் ஆயம் உத்தரவிட்டது.

2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புங்குடுதீவில் சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவி கடத்தப்பட்டு பின்னர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் எழுவருக்கு விசேட நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

அவர்கள் எழுவரும் இந்த மரண தண்டனை சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து இந்தத் தீர்ப்பை வலுவிழக்கச் செய்யுமாறு உத்தரவிடக் கோரி மேன்முறையீடு செய்தனர்

மேலும் தங்களை இந்தக் குற்றச்சாட்டில் இருந்து விலக்கி தாம் நிரபராதிகள் எனத் தீர்ப்பளிக்குமாறும் குறித்த மேன்முறையீட்டில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசின் சாக்குப்போக்கு

இலங்கையில் மூன்றாவது நிறைவேற்ற திகார ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரி.பி. விஜேதுங்கவுக்குப் பின்னர் வந்த ஜனாதி பதிகள் அனைவரும் ஒரு விடயத்தில் ஒற்று மைப்பட்டவர்கள் - கோட்டாபய ராஜபக்ஷ வைத் தவிர.

ஏனையோர் எல்லோருமே - ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க எல்லோருமே - தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்கி, நாடாளுமன் றத்துக்குப் பதில் கூறக்கூடிய பிரதமர் தலை மையிலான அரசு முறைமையை நடை முறைக்குக் கொண்டு வருவோம் என்று உறுதி கூறித்தான் அந்தப் பதவிக்கு வந்தார்கள்.

ஆனால் அந்தப் பதவியை முழு அளவில் ஆண்டனுபவித்தமையைத் தவிர, அதனை ஒழிப்பதற்காக முழுமையான - உருப்படியான - நடவடிக்கை எதனையும் அவர்கள் எடுக்கவேயில்லை. அவர்களில் மைத்திரிபால சிறிசேன மாத்திரம் சற்று வித்தியாசமானவராக அமைகிறார். அவர் தாம் அனுபவித்த பதவியின் அதிகாரங்களை தாமே இணங்கி சற்றுக் குறைத்துக் கொண்டார்.

இந்த நான்கு ஜனாதிபதிகளைத் தொடர்ந்து இப்போது பதவிக்கு வந்திருக்கும் அநுர குமார திஸாநாயக்கவும் தாமும் அவர்களைப் போலவே வாக்குறுதி கொடுத்துவிட்டு, அவர்களைப் போலவே அதனை நிறை வேற்றாத மூன்றாம் தர அரசியல்வாதியாகத் தன்னை வெளிப்படுத்த முயல்கின்றாரோ என்ற சந்தேகம் இப்போதே வந்துவிட்டது. அவர் அதிகாரத்துக்கு வந்து நான்கு மாதங் களுக்குள் அத்தகைய சந்தேகத்தை ஏற்படுத் தும் விதத்தில் அவரது நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

தாம் அதிகாரத்துக்கு வந்தால், 2016 முதல் 2019 வரை முன்னெடுக்கப்பட்ட புதிய அரச மைப்பு முயற்சியை தொடர்ந்து மேற் கொண்டு, அதனைப் பூர்த்தி செய்வேன் என்று அவர் வாக்குறுதி அளித்திருந்தார்.

அந்த வாக்குறுதியை அவர் நிறைவேற்று வதற்கு தேவையான மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற வலி மையை மக்கள் அவருக்கு அளித்திருக்கி றார்கள். ஆனால் அந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றி அமைக்கும் புதிய அரசமைப்பை ஏற்படுத் துவதில் சிரத்தை உள்ளவராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இப்போது தம்மை வெளிப்படுத்தவில்லை.

இருக்கின்ற ஆதரவை வைத்து மிக விரை வில் செய்து முடிக்க கூடிய அந்தக் காரியத்தை இப்போது செய்யாமல் தள்ளிப் போடும் நடவடிக்கையை அவர் முன்னெடுத்து வருகிறார்.

"புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளை விட பொருளாதார சவால்களை எதிர்கொள் வதற்கான வேலைத் திட்டங்களுக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. அந்த வகையில் தற்போது புதிய அரசமைப்பை கொண்டுவரப் போவதில்லை.'' - என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கிறார்.

"நாடு எதிர்கொள்ளும் பாரிய சவால் பொருளாதார நெருக்கடி ஆகும். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான முழு அரசும் அந்தச் சவாலை எதிர்கொள்வதற் கான பணிகளிலேயே ஈடுபட்டுள்ளது. அதற்கு இன்னும் காலம் செல்லும். இதன் போது ஏற்படக்கூடிய வழமையான பிரச்சி னைகள் பல உள்ளன. அவற்றை முகாமைத் துவம் செய்து வருகின்றோம். பொருளாதாரம் ஓரளவு ஸ்திர நிலைமையை அடைந்ததை அடுத்து புதிய அரசமைப்புப் பணிகளை முன்னெடுப்போம்'' என்றும் அவர் கூறியி ருக்கிறார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சுமுக நிலைக்கு கொண்டு வருவது என்பது உடன் நடக்கப்போகின்ற காரியம் அல்ல. இது 'கடலில் அலை ஓய்ந்த பின்னர் குளிக்க லாம் என்று காத்திருப்பதற்கு' ஒப்பான வேலையாகும்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவ டிக்கை ஒரு புறம் முன்னெடுக்கப்பட, மறு புறம் அரசமைப்பை மாற்றி அமைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஒன்றைக்காட்டி மற்றொன்றை தவிர்ப்பது அதனைச் செய்யாமல் உச்சுவதற்கான வேலை யன்றி வேறில்லை.

மனம் உண்டானால் இடம் உண்டு. உறுதி இருக்குமானால் அரசினால் அந்த வேலையை உடனடியாகவே செய்து முடிக்க முடியும்.

அரசுகள் அதிகாரத்துக்கு வந்தவுடன் அரசமைப்பு மாற்றங்களை முன்னெடுக்க வேண்டுமே தவிர, ஆட்சியின் அந்தத்தில் - ஆட்சி அதிகாரம் தொடர்பான நிலைமை தடுமாற்றத்தில் இருக்கும் காலத்தில் - அத னைச் செய்ய முடியாது.

நிறைவேற்றதிகாரமும் நாடாளுமன்றப் பலமும் தமது கைகளில் வீழ்ந்துள்ள நிலை யில், அவற்றை முதல் தடவையாக ருசி பார்க்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக் கவும் அவரது தேசிய மக்கள் சக்தியினரும் அவற்றை நீண்ட காலம் முழு அளவில் ருசிக்க விரும்புகின்றனரே தவிர, நாட்டை ஒரு புதிய சகாப்தத்துக்குள் இட்டுச் செல்லும் விதத்தில் புதிய ஆட்சி முறைமையை கொண்டு வர விரும்புகிறார்கள் இல்லை என்பதுதான் அவர்களின் இப்போதைய கருத்து வெளிப்பாட்டில் - நடத்தையில் - இருந்து புரியும் விடயமாக உள்ளது.

அதிகாரத்துக்கு வரும் அரசியல் தலைமை கள் அதனை ருசிப்பதில் காட்டும் ஈடுபாட்டை நாட்டின் நலனை நோக்கி காட்டுவதில்லை என்பது வெளிப்படையான உண்மை.





# சுதந்திர தினத்தில் கரிநாள் அனுஷ்டித்த லண்டனில் வாழும் ஈழத் தமிழர்கள்!

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று முன்தினம் லண்டனில் வாழும் ஈழத் தமிழர்களும் கரிநாளாக அனுஷ்டித்தனர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் பெரும் எண்ணிக்கையான ஈழத் தமிழர்கள் பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்பாக ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் பிரித்தானியப் பிரதமர் இல்லம் வரை அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.இந்தப் பேரணியின் பின்னர் தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை மீள பெற்றுக்கொள்வதற்கு உதவ வேண்டிய கடப்பாடு பிரிட்டனுக்கு உள்ளதை வலியுறுத்தி பிரிட்டிஷ் பிரதமருக்கும் மன்னர் சார்ல்ஸ் மற்றும் உயரதிகாரிகளுக்கும் கடிதம் ஒன்றை ஏற்பாட்டாளர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்வில் உலகளாவிய புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொண்டு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர்.



# கல்வி மேம்பாடு, வேலைவாய்ப்பை உள்ளடக்கிய முன்மாதிரிக் கிராமம்

## தென்மராட்சி, உசனில் வைத்தியர் பரமநாதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உசன் கிராமத்தில் கல்வி மேம்பாடு, தொழில் வாய்ப்பு ஆகிய பல்வேறு செயற்றிட்டங்களை உள்ளடக்கிய மாதிரிக் கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய இராஜ்சியத்தைச் சேர்ந்த வைத்தியரும் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் லண்டன் கிளை உப தலைவருமான வே.பரமநாதன் தெரிவித்துள்ளார்.

இன்று (06) வியாழக்கிழமை தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முதற்கட்டமாகத் தென்மராட்சி, உசன் கிராமத்தில் பிரதேச புலம்பெயர் மக்களுடைய மிகப்பெரிய பங்களிப்பில் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் ஓர் அங்கமாக முன்பள்ளிக் கல்வி ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி ஆகியவற்றின் மேம்பாட்



டுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உசன் கிராமத்தில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் 10 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலை இன்று 35 மாணவர்கள் மூன்று ஆசிரியர்கள் கட்டட வசதிகளுடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

அத்தோடு உயர்தரத்தில் சித்தியடைபவர்கள் அனைவராலும் பல்கலைக்கழகம் செல்ல முடிவதில்லை. அவ்வாறு பல்கலைக்கழக கல்வியை தவறவிட்டவர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் கிராமத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய கற்கைகளை இலவசமாக பயிலக் கூடிய வழிவகைகள் இவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

மேலும் பிற நாடுகள் மற்றும் வேறு பிரதேசங்களுக்கு சென்று பணி செய்யக் கூடிய விதத்தில் ஆங்கில மற்றும் சிங்கள அறிவை முன்பள்ளிப் பராயத்தில் இருந்து எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிக விசேடமாக கிராமத்தில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கிலும் தற்சார்ப்பு பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கிலும் கிராமிய பண்ணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனூடாக அதில் ஆர்வம் கொண்டவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

உசன் கிராமத்தில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்ட பின்னர் ஏனைய கிராமங்களிலும் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க ஆர்வமாக உள்ளோம்.- என்றார்.

வைத்தியர் பரமநாதன் கடந்த 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து சென்று 48 வருடங்களாக ஐக்கிய இராஜ்சியத்தில் வைத்தியராக கடமைபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மன்னாரில் மேய்ச்சல் தரவை இன்றி இறந்து போகின்றன கால்நடைகள்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மற்றும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மேய்ச்சல் தரவை பிரச்சினை நீண்ட நாள்களாக இடம்பெற்று வருகின்ற நிலையில் அண்மைக் காலமாக அதிக கால் நடைகள் இறந்து வருகின்றன.

குறிப்பாக மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நாயாற்று வெளி பகுதியில் அதிகளவான கால் நடைகள் மேய்ப்பதற்காக கொண்டு செல்லப்படுகின்ற நிலையில், அங்கு சீரற்ற காலநிலை அதிக பனி காரணமாக அதிக மாடுகள் இறந்துள்ளன.

அதேநேரம் அதிகளவான மாடுகள் ஒரே பகுதிகளில் மேய்வதால் போதிய உணவு இன்றிப் பட்டினியால் உடல் மெலிந்து மாடுகள் இறந்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் கால்நடை மேய்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் மன்னார் மாவட்ட செயலகத்தால் மேய்ச்சல் தரவைக்கு என பல வருடங்களுக்கு முன் ஒதுக்கப்பட்ட பல ஏக்கர் காணிகள் பல்வேறு அரச திணைக்களங்களால் இதுவரை மேய்ச்சல் தரைக்கு விடுவிக்கப்படாத நிலையில் பொறுத்தமற்ற இடங்களில் மேய்ச்சல் நடவடிக்கைகளுக்கு மாடுகளை கொண்டு செல்வதால் இவ்வாறு மாடுகள் இறக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் காரைதீவு வி.கழகம் வெற்றி!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு ஓர்க் இணையக் குழுவானது, காரைதீவு மண்ணைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 03 கடின பந்துக் கழகங்களான காரைதீவு விளையாட்டுக் கழகம், காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் மற்றும் காரைதீவு ஜொலி கிங்ஸ் விளையாட்டுக் கழகம் என்பவற்றுக்கிடையே ஏற்பாடுசெய்த “காரைதீவு கிரிக்கெட் கார்ணிவல் – 2025” எனும் முத்தரப்பு கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது, நேற்று முன்தினம் விபுலானந்தா மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியானது, புலம்பெயர்ந்தும் காரைதீவு மண்ணை மறவாத ஆஸ்திரேலியா வாழ் காரைதீவு மக்கள் ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சியம் வாழ் காரைதீவு மக்கள் ஒன்றியம் ஆகிய இரு அமைப்புக்களின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

காரைதீவு ஓர்க் தலைவர் லோ. சுலெக்சன், காரைதீவு கிரிக்கெட் கார்ணிவல் தலைவர் தி. லாவண்ணியன் மற்றும் இணைப்பாளர் .ந.சத்தியஜித் ஒருங்கிணைப்பிலும், காரைதீவு ஓர்க் இணையக் குழு உறுப்பினர்களின் பங்களிப்புடனும் இந்தச் சுற்றுப் போட்டிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆரம்ப நிலைப் போட்டிகளின் அடிப்படையில் இறுதிப் போட்டிக்குக் காரைதீவு விளையாட்டுக் கழகம் மற்றும் காரைதீவு ஜொலி கிங்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன தெரிவு செய்யப்பட்டி ருந்தன.

இறுதிப் போட்டியில் காரைதீவு விளையாட்டு கழகம் 07 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று கன்னி வெற்றியாளராக வெற்றிவாகை சூடியது.

இறுதிப் போட்டியில் காரைதீவு வரலாற்றில் முதன்முறையாக இளஞ்சிவப்பு நிற கடினப்பந்து பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு கிரிக்கெட் கார்ணிவல் தலைவர் தி.லாவண்யன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ. ஜெகராஜன் கலந்து கொண்டார்.

வெற்றி பெற்ற காரைதீவு விளையாட்டு கழகத்துக்கான வெற்றிக் கிண்ணத்தை பிரதம அதிதி சிவ.ஜெகராஜன் வழங்கினார்.

ரண்ணஸ்அப் கிண்ணத்தை ஜொலி கிங்ஸ் விளையாட்டு கழகத்துக்கு அதிதிகளான ஒஸ்கார் இணைப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார் ஆகியோர் இணைந்து வழங்கினர். கிண்ணங்களுடன் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# குருநகர் முதலாவது குறுக்குத்தெரு கழிவு நீர் வாய்கால் துப்புரவுப் பணி!

## றஜீவன் எம்.பி. நடவடிக்கை





குருநகர் முதலாவது குறுக்குத் தெருவில் நீண்ட காலமாக தேங்கிய கழிவு நீர், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் நடவடிக்கையால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

குருநகர் முதலாவது குறுக்குத்தெருவில் நீண்ட காலமாகத் துப்பிரவாக்கப்படாமல் காணப்பட்ட பகுதிகளில் கழிவு நீர் தேங்கி நிற்பதால், மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளனர். இதனால் தொற்று நோய்கள், சுவாசப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல பிரசினைகள் ஏற்பட்டு வந்தன.

இந்த விடயத்தை தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து, யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரிடம் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, நேற்று (05) துப்பிரவாக்கல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்களின் நலனுக்காக உரிய நடவடிக்கைகளை எடுப்பது தன்னுடைய கடமை என்று தே.ம.ச. நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி இதன்போது கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# சுகாதார நிறுவனங்களின் செயற்றினை மேம்படுத்தல் தொடர்பிலான செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் தொடர்பான செயலமர்வு பிராந்திய பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் அவர்களின் ஒருங்கிணைப்பில் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், பிராந்திய பிரிவு தலைவர்கள், பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கால தாமதங்களைக் கண்டறிதல், செயல்திறனை மேம்படுத்துதல், விரயத்தை குறைத்தல், முறையான மேற்பார்வையை உறுதி செய்தல், எதிர்காலத் திட்டமிடல் நடவடிக்கைகளின் நிர்வாகத்தை மேம்படுத்துதல் போன்ற பொதுப் பிரச்சினைகளைப் பற்றி இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. சில வைத்தியசாலைகளுக்கு அலுவலக இலத்திரனியல் உபகரணங்களும் பிராந்திய பணிப்பாளரால் வழங்கி வைக்கப்பட்டன.



# புத்தளத்தில் இலவச கண் பரிசோதனை!

(கற்பிட்டி எம் எச்.எம் சியாஜ்)

புத்தளம் ரத்மல்யாய கிராமத்தில் பார்வைக் குறைபாட்டால் அவதியுற்றுள்ள மக்களின் நலன் கருதி தேசத்தின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இலவச கண் பரிசோதனை மருத்துவ முகாம் ஒன்று ரத்மல்யாய மருத்துவ நிலையத்தில் அமைப்பின் தலைவர் பாஸில் தலைமையில் இடம்பெற்றது.

இந்த மருந்து முகாமில் அதி நவீன உபகரணங்களின் உதவியுடன் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

சலுகை அடிப்படையில் மூக்கு கண்ணாடிகள் அன்றைய தினமே வழங்கப்பட்டன. இதில் 11 கிராமங்களை சேர்ந்த மக்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.






# யான் ஓயா திட்டம் தொடர்பான முறைகேடு பற்றிக் கலந்தாய்வு

(எஸ்.கீதபொன்கலன்)

யான் ஓயா திட்டம் தொடர்பாக ஏற்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துதல், திட்டம் குறித்த தொடர் விசாரணைகளை நடத்துதல் மற்றும் எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தால் திருகோணமலை மக்கள் பெறக்கூடிய நன்மைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்ராவுக்கும் காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்கவுக்கும் இடையில் இது தொடர்பான கலந்துரையாடல் இன்று (6) நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

முன்மொழியப்பட்ட கந்தளாய் களுகங்கை திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டது.

அத்துடன் மகாவலி நிலங்கள் எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், அரசியல் சலுகைகளின் அடிப்படையில் கொள்ளையடிக்கப்பட்ட மகாவலி நிலங்களை மீளப்பெற்று விவசாய சமூகத்துக்கு வழங்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது இந்தக் கலந்துரையாடலில் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் அ.க.ரொஷான் பிரிய சஞ்ஞனவும், அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் 14 ஆவது பரிசளிப்பு விழா நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 14 ஆவது பரிசளிப்பு விழா வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இல. 286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி திரு சி.ரகுராமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய நடன பாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# யாழ். இந்து மாணவரின் திறன் வெளிப்படுத்துகை நிகழ்வு ஞாயிறன்று

யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களின் 'ரலன்ட் ஷோ' எனும் நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய யாழ். இந்து மாணவர்களின் தமிழ் மற்றும் ஆங்கில நாடகங்களுடன் பல்வேறு இசை நிகழ்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கான ஆதரவை பல்வேறு தரப்பினரிடம் இருந்து கல்லூரி சமூகத்தினர் வேண்டி நின்கின்றனர். இந்த நிகழ்வு மூலம் பெறப்படும் நிதி முற்றுமுழுதாக யாழ் இந்துக் கல்லூரி இயல், இசை, நாடகத் துறையின் விருத்திக்கு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# நல்லதண்ணி ஓயாவில் சடலம் மீட்பு!

(மஸ்கெலியா)

நல்லதண்ணி ஓயாவில் சடலம் ஒன்று மிதப்பதாக கிடைக்க பெற்ற தகவலை தொடர்ந்து நல்லதண்ணி பொலிஸார் சம்பவம் இடத்துக்கு விரைந்து சென்று அங்கு நல்லதண்ணி ஓயாவில் மிதந்த சடலத்தை மீட்டனர்.

மீட்கப்பட்ட சடலம் உடற் கூற்று பரிசோதனை மேற்கொள்ள டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் பதுளை பஸ்சரை ஒப்டன் பகுதியை சேர்ந்த 34 வயது உடைய ருவான் சத்துரங்க என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# வறிய மக்களின் பொருளாதாரத்தை பறிப்பதா கிளீன் ஸ்ரீலங்கா என்பது?

# யாழ். நகர் நாறுகிறது! மக்கள் வாடுகின்றனர்!

## கிளீன் பண்ணுவது பழக் கடையையா?

### யாழ். நகர் பழக்கடை உரிமையாளர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.மத்திய பேருந்து நிலைய வளாகத்தின் பின்புறமாக வைரவர் கோயில் வீதியில் உள்ள பழக்கடை வியாபாரிகள் யாழ். மாநகர சபையின் மனிதாபிமானமற்ற செயற்பாட்டை கண்டித்து வியாபார நடவடிக்கைகளை இடைநிறுத்தி போராட்டம் ஒன்றை இன்று (06) முன்னெடுத்தனர்.

இந்தப் பகுதியில் தற்காலிக கடைகளை அமைத்து பழங்களை விற்பனை செய்துவரும் வியாபாரிகள், மாநகர சபையால் தமது வாழ்வாதாரம் பறிக்கப்படுவதாகவும் தாம் கடலில் குதித்து சாகவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழில் தமது கடைகளைப் பூட்டி கடைத் தொகுதியின் முன்றலில் போராட்டத்தை நடத்திய பழக்கடை உரிமையாளர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

வியாபாரிகளாகிய நாம் அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக எமது வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவை கொண்ட ஈ.பி.டி.பியின் ஆட்சி அதிகார வரையறைக்குள் யாழ். மாநகர சபை இருந்தபோது இந்த கடைகள் எமக்கு வழங்கப்பட்டன.

இதற்காக நாம் யாழ். மாநகர சபைக்கு ஆரம்பதில் 3000 ரூபாவும் தற்போது 7500 ரூபாவும் வரியாக செலுத்தி வருகின்றோம். இந்த நிலையில் தற்போதும் மேலும் 300 ரூபா வரி உயர்வு என கூறுகின்றனர் அதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இதேநேரம் கடைகளின் முகப்பு போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக அதிகாரிகள் எம்மிடம் தெரிவித்ததற்கு இணங்க அதையும் சில அடிகள் உள்ளே எடுப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளோம்.

வாழ்வாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு கடைகளை அமைத்து ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம்.

ஒரு கடையில் குறைந்தது மூன்று பேர் வேலை செய்கின்றனர். இங்கு 31 கடைகள் உள்ளன. இவற்றில் குறைந்தது 100 பேர் தொழில் செய்கின்றனர். அதுமட்டுமல்லாது 100 குடும்பங்களின் வாழ்வாதாரம் இதில் தங்கியுள்ளது.

இந்த நிலையில் யாழ் மாநகர சபையின் அதிகரிகள் எமது கடைகளின் அளவை அதாவது அகலந்தை குறைத்து அடையாளமிடும் நடவடிக்கையை நேற்றையதினம் முன்னெடுத்திருந்தனர்.

ஆனால் நாம் எதிர்ப்பு காட்டியதை அடுத்து அது நிறுத்தப்பட்டது. ஏற்கனவே 6 அடிகள்தான் ஒரு கடைக்கான இடப்பரப்பாக வழங்கப்பட்டது.

இந்த 6 அடிக்குள் பொருள்கள், பழங்களை வைத்து விற்பனை செய்யும் தளபாடங்கள், குறைந்தது 3 வியாபாரிகள் என வியாபார நடவடிக்கைகளை கடும் சிரமத்தின் மத்தியில் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நிலையில் அந்த 6 அடி அகலத்தையும் மேலும் குறைக்க நடவடிக்கை எடுக்க தற்போது முயற்சி செய்து அதற்கான அடையாளமிடலுக்காக நேற்று வருகை தந்து நடவடிக்கை மேற்கொள்ள முயற்சித்தனர். அதற்கு நாம் கடும் எதிர்ப்பு தெரிவித்து அந்த நடவடிக்கையை நிறுத்தியிருந்தோம்.

அதுமட்டுமல்லாது பல்வேறு கடன்களை பெற்றே நாம் இந்த சிறு முதலீடுகளை ஏற்படுத்தியுள்ளோம். இதன் வருமானத்தை வைத்தே பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றார்கள். மாநகர சபையின் இந்தச் செயற்பாட்டால் அவர்களுடைய நிலையும் கவலைக்கிடமானதாக முடியும்.

இதேநேரம் நாட்டை சுத்தம் செய்வோம் என கோசமிட்டு எமது வாக்குகளை வசப்படுத்தி வெற்றியீட்டிய அநுர தலைமையிலான அரசு, தான் கூறிய வாக்குறுதிகளை மீறி எம்மை ஏமாற்றிவருகின்றது.

அநுர அரசின் கட்டளைப்படியே தாம் நடவடிக்கை எடுக்கின்றனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

அவ்வாறாயின் மக்களின் அனைத்து செயற்பாடுகளையும் பொருளாதார ஈட்டலையும் ஒட்டுமொத்தமாக அழித்து மக்களை வீதியில் விடுவதா இந்த அரசின் "கிளின் ஸ்ரீலங்கா" திட்டம் என்ற சந்தேகம் எழுகின்றது.

இதேநேரம் நாம் நாட்டுக்கு சுமையாக இருக்கவில்லை. வேலை வாய்ப்பு தா என கோரவில்லை. அதற்காக வீதியில் இறங்கி போராடவும் இல்லை. சுய தொழில் நடவடிக்கைகளையே எம்மால் முடிந்த முதலீடுகளை செய்து முன்னெடுத்து வருகின்றோம்.

இதேநேரம் எமது இந்த சுயதொழில் நடவடிக்கையைத் தடுத்து, தமது வருமானத்தை மட்டும் குறியாக கொண்டு இயங்கும் இந்த மாநகர சபை, எமக்கான பொருளாதார ஈட்டலை வழங்குமா?

எனவே எமக்கான நியாயம் கிடைக்காவிடின் நியாயத்துக்காக நாம் எம்மால் முடிந்தவரை தொடர்ந்தும் போராடுவதற்கு தயாராகவே இரக்கின்றோம்.

இதேவேளை, எமது பகுதியில் எத்தனையோ அத்தியாவசிய தேவைகள் யாழ். மாநகரசபையால் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிள்ளது. ஆனால் அவற்றை அவர்கள் செய்வதில்லை.

குறிப்பாகப் பஸ் நிலையத்தின் அருகில் உள்ள கழிவுநீர் வடிகால் பகுதியில் ஏறத்தாள 2 அடிக்கும் மேலாக கழிவு நீர் தேங்கி நிற்கின்றது. அதனால் துர்நாற்றம் அதிகமாக உள்ளது.

இதை எடுத்துக் கூறி சீர் செய்ய கோரினாலும் யாழ். மாநகரசபை கண்டு கொள்வதில்லை.- என்று தெரிவித்தனர்.



| தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு | | | |
|---|---|---|---|
| நிறுவனம் | ஆம் ஆத்மி | பாஜக | காங். |
| டைம்ஸ் நவ் | 32-37 | 37-43 | 2 - 0 |
| என்டிடிவி | 10-19 | 51-60 | 0 |
| சிஎன்என் | 30 | 40 | 0 |
| பி-மார்க் | 21-31 | 39-49 | 1 |
| மேட்ரைஸ் | 32-37 | 35-40 | 1 |
| சாணக்யா | 25-28 | 39-44 | 2-3 |

# டில்லியில் பா.ஜ.கவுக்கு வெற்றி வாய்ப்பு: தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு

டில்லி சட்டப் பேரவைக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் மாலை 5 மணி நிலவரப்படி 57.70 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன. இதில் பா.ஜ.க. அதிக இடங்களில் வெற்றி பெறும் என பெரும்பான்மையான நிறுவனங்கள் வெளியிட்ட தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

டில்லி சட்டப்பேரவையின் பதவிக் காலம் எதிர்வரும் 23 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து டில்லி சட்டப்பேரவை தேர்தலை, தேர்தல் ஆணையம் நேற்று நடத்தியது. மதுபான கொள்கை வழக்கில் சிக்கி சிறைக்கு சென்று பிணையில் வெளியே வந்த டில்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால், தனது நேர்மைக்கு மக்கள் மீண்டும் சான்றளித்த பின்பே முதல்வராக வருவேன் என்ற சபதத்துடன் தனது பதவியை இராஜினாமா செய்தார். தொடர்ந்து 3 ஆவது முறையாக ஆட்சி அமைக்க கேஜ்ரிவால் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். பா.ஜ.கவை கடுமையாக விமர்சித்தார்.

அதேபோல், பா.ஜ.க. மூத்த தலைவர்கள் டில்லியில் ஆட்சியை கைப்பற்ற தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். பிரதமர் மோடி பிரச்சாரத்தில் அர்விந்த் கேஜ்ரிவாலை விமர்சித்தார். காங்கிரஸ் கட்சியும், டில்லியில் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும் என்ற முனைப்புடன் தேர்தல் பிரச்சாரத்தில் களம் இறங்கியது. 3 கட்சிகளின் தீவிர பிரச்சாரம் கடந்த 3 ஆம் திகதியுடன் ஓய்ந்தது.

டில்லியில் மொத்தம் உள்ள 70 சட்டப்பேரவை தொகுதிகளில் 1.56 கோடி வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு 13,766 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. தேர்தல் பாதுகாப்பு பணியில் பாதுகாப்பு படை வீரர்கள் ஆயிரக்கணக்கானோர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இங்கு நேற்று காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது. மக்கள் ஆர்வத்துடன் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். மாலை 6 மணியளவில் வாக்குப் பதிவு நிறைவடைந்தது. நேற்று மாலை 5 மணி நிலவரப்படி 57.7 சதவீத வாக்குகள் பதிவாகின என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

வாக்குப் பதிவு முடிவடைந்தவுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 'சீல்' வைக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. சட்டப்பேரவை தேர்தல் நேற்று மாலை முடிவடைந்ததையடுத்து, வழக்கம்போல் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியாயின.

டைம்ஸ் நவ் வெளியிட்ட தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பில் ஆம் ஆத்மி 32 முதல் 37 இடங்களையும், பாஜக 37- 43 இடங்களையும், காங்கிரஸ் 2 இடங்களை கைப்பற்றும் என தெரிவிக்கப்பட்டது. என்.டி.டி.வி. வெளியிட்ட முடிவில் ஆம் ஆத்மி 10 முதல் 19 இடங்களையும், பா.ஜ.க. 51- 60 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்தது.

சி.என்.என். வெளியிட்ட முடிவில் ஆம் ஆத்மி 30 இடங்களையும் பா.ஜ.க. 40 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்தது.

பெரும்பாலான கருத்துக் கணிப்பு முடிவுகள் பா.ஜ.க. வெற்றி பெறும் என்றே தெரிவித்துள்ளன. நாளை மறுதினம் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

# இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டமை குறித்து விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் அமளி

## இரு அவைகளும் ஒத்திவைப்பு



அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்படும் இந்தியர்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் அவை பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

பட்ஜெட் கூட்டத்தொடரின் ஐந்தாவது நாளான இன்று காலை 11 மணிக்கு நாடாளுமன்ற மக்களவைக் கூட்டம் தொடங்கியது. அமெரிக்காவில் இருந்து 100 இற்கும் அதிகமானோர் நாடு கடத்தப்பட்டிருப்பது தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி ஒத்துவைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கி இருந்தது. அதில் நமது மக்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவர்களின் கண்ணியத்தைக் காத்திடவும் இந்த அவை இந்த விவகாரத்தை உடனடியாக கையாள வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவையில் கேள்வி நேரம் தொடங்கியது. பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கு ட்ரோன்களைப் பயன்படுத்துவது தொடர்பான கேள்வியுடன் மக்களவை கேள்வி நேரம் தொடங்கியது. என்றாலும் இந்தியர்கள் நாடு கடத்தப்படுவது குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் குறித்து 12 மணிக்கு விவாதிக்கப்படும் என்று சபாநாயர் ஓம் பிர்லா தெரிவித்தார்.

அடுத்து ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தண்ணீரின் தரம் குறித்து பா.ஜ.க. எம்.பி., சுதீர் கேள்வி எழுப்பினார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவர்களை அமைதி காக்குமாறு சபாநாயகர் கோரினார். மேலும் இந்த விவகாரம் மற்றொரு நாட்டின் கொள்கை தொடர்பானது என்று தெரிவித்தார். அவரது கோரிக்கையை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில், ஓம் பிர்லா அவையை 12 மணி வரை ஒத்திவைத்தார். மாநிலங்களவையிலும் இதே கோரிக்கையை வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் மாநிலங்களவையும் பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.





# விளையாட்டுப் போட்டிகளில் திருநங்கைகள் பங்கேற்கத் தடை

## உத்தரவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

திருநங்கைகளாக மாறியவர்கள் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தடை விதிக்கும் நிர்வாக உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார் என வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிறப்பால் ஆணாக இருந்து, திருநங்கைகளாக மாறியவர்கள், பெண்கள் அல்லது சிறுமிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வீராங்கனைகளாகப் பங்கேற்பதைத் தடை செய்யும் நிர்வாக உத்தரவில் நேற்று ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின் பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்து வரும் நிலையில், ஏற்கனவே மாற்றுப் பாலினத்தவர்களுக்கான பல்வேறு உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படும் நிலையில், தற்போது திருநங்கைகள் விளை யாட்டுப் போட்டிகளில் பங்கேற்ப தற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், அமெரிக்காவில் ஆண் மற்றும் பெண் என இரண்டு பாலினங்கள் மட்டுமே உத்தியோகப்பூர்வமானது என்ற உத்தரவும் ட்ரம்பினால் பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காசாவை கைப்பற்றும் டொனால்ட் ட்ரம்பின் திட்டத்தை மீளப் பெறும் வெள்ளை மாளிகை

காசாவில் அழிக்கப்பட்ட பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்வைத்த திட்டத்தை மீளப் பெறும் வகையிலான அறிவிப்பை வெள்ளை மாளிகை விடுத்துள்ளது.

பாலஸ்தீனியர்களை காசாவில் இருந்து 'தற்காலிகமாக இடம் பெயர்த்த' மட்டுமே டொனால்ட் ட்ரம்ப் விரும்பினார் என வெள்ளை மாளிகையின் பத்திரிக்கை செயலாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அந்த பகுதியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அமெரிக்கா பணம் செலுத்தாது எனவும், அமெரிக்கத் துருப்புக்களை அனுப்புவதற்கு வாய்ப்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் அறிவிப்பை 'சட்டவிரோதமானதும், ஒழுக்கமற்றதும், பொறுப்பற்றதுமான' செயல் எனப் பாலஸ்தீனத்துக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பானீஸ் விமர்சித்துள்ளார்.

அதேநேரம், அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள ஹமாஸ் அமைப்பினர், இந்த திட்டம் பிராந்தியத்தில் குழப்பத்தையும் பதற்றத்தையும் உருவாக்குவதற்கு வழிவகுக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், காசாவில் உள்ள தங்களது மக்கள் அதனை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்க மாட்டார்கள் எனவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

வியாழக்கிழமை 06/02/2025

## கனடாவில் இடம் பெறும் நிதி மோசடி குறித்து எச்சரிக்கை

கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில் இடம்பெறும் நிதி மோசடி தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இந்த 02




# கனடாவில் புதிய குடியேற்ற திட்டங்கள் மூலம் நிரந்தர குடியுரிமையுடன் வேலை கிடைக்கும்

கனடாவில் புதிய குடியேற்ற திட்டங்கள் மூலம் பிறநாட்டினருக்கு நிரந்தர குடியுரிமையுடன் வேலை கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்நாட்டின் குடியேற்றம் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்.

திறமையான தொழிலாளர்களை நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு ஈர்ப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகஅவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் வேலைவாய்ப்பு கிடைப்பது மட்டுமின்றி, நேரடியாக குடியுரிமை பெறும் வாய்ப்பையும் வெளிநாட்டவர்களுக்கு கனடா அரசு அளிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஊரக சமூக குடியேற்ற திட்டம் (RCIP) ஊரக பகுதிகளில் (சிறிய டவுன், கிராமப்புறங்கள்) நிலவும் தொழிலாளர் பற்றாக்குறையை சரி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் மூலம் உள்ளூர் நிறுவனங்கள், அதாவது இப்பகுதிகளில் இருக்கும் நிறுவனங்கள் திறமையான வெளிநாட்டு தொழிலாளர்க 02




# ஒன்றாரியோவில் கொள்ளை; சந்தேகநபர் ஒருவர் கைது

கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தின் மோரிஸ்டோன் பகுதியில் வீடு உடைப்பு சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீட்டை உடைத்து கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி இந்த கொள்ளை சம்பவம் பெற்றுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் வெலிங்டன் கவுன்ட்டி பகுதியில் வீடு உடைக்கப்பட்டு கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மூன்று பேர் வீட்டுக்குள் 02

# கனடாவில் பொருளாதாரம் தொடர்பில் நிச்சயமற்ற நிலைமை நீங்கவில்லை

## கியூபெக் முதல்வர் தெரிவிப்பு



கனடாவில் பொருளாதாரம் தொடர்பிலான நிச்சயமற்ற நிலைமை நீங்கவில்லை என கியூபெக் மாகாண முதல்வர் பிரான்கோயிஸ் லாகுலெட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்ட வரி விதிப்பு தொடர்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

வரி விதிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த நிச்சயமற்ற நிலைமை நீடிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வரி விதிப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக ஏற்கனவே கியூபெக் மாகாண நிறுவனங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கனடாவில் புதிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் இணைக்கப்படுவார்கள்.

இந்த திட்டம் பல மாகாணங்களில் 18 பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு வேலை வாய்ப்புடன் நிரந்த குடியுரிமையும் கிடைக்கும்.

அதேபோல், இரண்டாவது திட்டமான பிரெஞ்சு பேசும் சமூக குடியேற்றத் திட்டம் (FCIP), சிறுபான்மையின பிரெஞ்சு பேசும் சமூகங்களுக்கு (கியூபெக் தவிர்த்து), பிரெஞ்சு பேசும் மக்களை அதிகளவில் குடியேற்ற உதவும் திட்டமாக இத்திட்டம் செயல்படுகிறது.

இவ்விரு திட்டங்களும் உள்ளூர் பொருளாதார மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் கனடா குடியேற்றம், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு (IRCC) இடையே இணைந்து செயல்படும்.

முக்கியமான தொழிலாளர் பற்றாக் குறையை உள்ளூர் அமைப்புகள் தங்கள் சமூகங்களில் அடையாளம் கண்டு இந்த துறையில் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் பெற்றுள்ள ஊழியர்களை நியமிக்க வழிவகை செய்கிறது.

இந்த திட்டங்களுக்கு கீழ் விண்ணப்பம் செய்பவர்களை ஆய்வு செய்து, வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க நம்பகமான நிறுவனங்களை நியமித்து பணியில் அமர்த்தி அந்த நிறுவனங்கள் நிரந்தர குடியுரிமைக்கு தகுதியானவரை பரிந்துரைக்கும். குறிப்பிட்ட தகுதிகளை இந்த திட் டங்களுக்காக பூர்த்தி செய்ய வேண்டும். பின் நியமிக்கப்பட்ட நிறுவனங்கள் வழங்கும் வேலை ஆணையை முதலில் பெற வேண்டும்.

அதன் பின் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கு தகுதி அடைய முடியும் எனினும், இந்த வேலை வாய்ப்பை பெற சில முக்கியமான தகுதிகள் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை தொடர்புடைய அனுபவம் மற்றும் மொழி திறன் தேவைகள் ஆகியவை அடங்கும்.

கனடாவிற்கு வெளியே கல்வி பயின்ற விண்ணப்பதாரர்கள் கல்வி சான்றிதழ் மதிப்பீட்டையும் வழங்க வேண்டும்.

கூடுதலாக, அனைத்து விண்ணப்பதாரர்களும் கனடாவில் தங்கள் குடும்பத்தினரை நிர்வாகம் செய்துகொள்ளும் அளவுக்கு போதுமான நிதி ஆதாரம் இருப்பதை நிரூபிக்க வேண்டும்.

சுகாதாரத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள், குறிப்பாக செவிலியர் உதவியாளர்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு தொழிலாளர்கள் போன்றோர் அதிக தேவை உள்ளவர்கள் மற்றும் இந்தத் திட்டங்களுக்கு தகுதியான வர்கள்.

மேலும், சுகாதாரத்துறை சார்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் நிரந்தர குடியுரிமை விண்ணப்பம் பரிசீலிக்கப் படும்போது, இரண்டு ஆண்டுகளுக்கு தற்காலிக Work Permit பெற்றவர்களாகவும் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒன்றாரியோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரவேசித்து இந்த கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தின் போது வீட்டு உரிமையாளர்களை கொள்ளையர்கள் தாக்கியுள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது.

இந்த கொள்ளைச் சம்பவத்தின் போது வீட்டில் இருந்த ஒருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் வீட்டில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த வாகனம் ஒன்றும் கொள் ளையிடப்பட்டுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மோசடி சம்பவத்தில் நபர் ஒருவர் சுமார் 20,000 டொலர்களை இழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகி றது.

சந்தேகத்திற்குமான கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறி, பணத்தை பாதுகாப்பாக வைத் திருப்பதற்கு உத்தரவாதம் அளித்து பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் வங்கியில் இருக்கும் பணத்தை நம்பிக்கை நிதியம் ஒன்றில் வாய்ப்பு செய்வதாக கூறி பணம் கொள் ளையிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.




இவ்வாறான மோசடிகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என பொது மக்களிடம் கோரிக்கையை விடுக்கப் பட்டுள்ளது.

விசாரணை அதிகாரிகள் என்ற போர்வையில் மக்களை ஏமாற்றி இந்த பணம் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# சீரற்ற காலநிலை குறித்து ரொறன்ரோவில் எதிர்வுகூறல்

கனடாவின் ரொறன்ரோவில் சீரற்ற காலநிலை தொடர்பில் எதிர்வு கூறல் வெளியிடப்பட்டுள்ளது.

நாளைய தினம் ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் பனிப்பொழிவு மற்றும் பனி மழை பெய்யும் சாத்தியங்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கனடிய சுற்றாடல் முகவர் நிறுவனம் இந்த எதிர்வு கூறல்களை வெளியிட்டுள்ளது.

நாளைய தினம் இரவு வேளையில் சில சென்றி மீற்றர் அளவிற்கு பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஈரப்பதனின் அளவு காரணமாக ரொறன்ரோவின் வெப்பநிலை மறை 12 பாகை செல்சியஸ் அளவில் உணரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளைய தினம் அதிகாலை 5.00 மணி முதல் பனிப்பொழிவு நிலவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.




# கனடாவில் பிரபல பாடகரின் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு

கனடாவில், பிரபல இந்திய பாடகர் ஒருவரின் இல்லத்தைக் குறிவைத்து இனந்தெரியாதவர்களினால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரபல பஞ்சாபி பாடகரான பிரேம் தில்லானின் குடியிருப்பைக் குறிவைத்தே கடந்த திங்கள் கிழமை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும், ஜெய்பால் புல்லர் எனும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் கும்பலொன்று இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 2022 ஆம் ஆண்டு பஞ்சாபின் மான்சா மாவட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பாடகர் சித்து மூஸ்வாலாவின் பெயரையும் அந்தக் குழு வெளியிட்ட ஒரு பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சிறையில் அடைக்கப்பட்ட ஜக்கு பகவான்பூரியா என்பவர் தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



இசைத்துறையில் பஞ்சாப் பாடகர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாகவும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

Boot Cut, Old Skool மற்றும் Majha Block உள்ளிட்ட உள்ளிட்ட பாடல்களால் கவனம் ஈர்த்தவர் தில்லான் என்பதும் குறிப்பிடத்தக்கது.